EROS

P.O. Box 277, London N5 2DF

27 DEC, 1986

~~EPRLF தடை மீதான LTTEயின் நடவடிக்கை.~~

# ஈழப் புரட்சி அமைப்பின் நிலைப்பாடு

சக இயக்கமான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)யை தடை செய்து ஆயுதமுனையில் கட்டுப்படுத்தி நிராயுதபாணிகளாக்க தமிழீழ விடுதலைப் புலிகள் எடுத்துக் கொண்ட முயற்சி பாரிய விளைவுகளை உருவாக்கியுள்ளது.

- தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பரபரப்பையூட்டி, இயக்கங்கள் மத்தியில் இருக்கும் பிரச்சனைகளையும் விரிவு படுத்தி ஈழப் போராட்டத்தை முடக்கி-விட தனது பிரச்சாரப் பீரங்கியையும், செயற்பாடுகளையும் சிறீ லங்கா அரசு முடுக்கி விட்டுள்ளது. இயக்கங்களின் பல முகாம்களைத தாக்குவதோடு மட்டும் நில்லாமல் பழியையும் மாற்று இயக்கங்கள் தலையில் சுட்டுகின்றது.

- சிறீ லங்கா அரசின் பிரச்சார ஊடகங்களான 'ஈழ வானொலியும்', 'தமிழீழ கொமியுனிஸ்ட் வானொலியும்' EPRLFம் சிறீ லங்கா அரசும் சேர்ந்து LTTEயின் முகாம்களைத் தாக்குகின்றனர் என்றும், LTTEயுடன் இணைந்து EPRLFக்கு எதிராக EROS செயற்படுகின்றது என்றும், 'யாழ்குடா நாட்டில் EROS நடுநிலைமை வகிக்கப் போவதாகவும் ஏனைய பகுதிகளில் புலிகளைப் பலப்படுத்தப் போவ-தாகவும் EROS பாலகுமார் அறிக்கை விட்டுள்ளார்' என்றும் பொய்ப்பிரச்சாரம் செய்கின்றன.

தொடரும் இயக்கச்சண்டைகளை தனக்குச் சாதகமான முறையில் பயன்படுத்தி ஈழப்போராட்-டத்தை அழித்தொழிக்க சிறீ லங்கா அரசு எல்லாவித முயற்சிகளையும் எடுக்கின்றது.

எதிரியின் பிரித்தாளும் தந்திரத்தை அம்பலப்படுத்தி, இன்று எழுந்துள்ள நெருக்கடியான சூழ்நிலையை சுமுகமான முறையில் சீரமைத்து சிறீ லங்கா அரசின் போர் முயற்சியை தோற்கடிக்க வேண்டும், ஈழப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.
இதுதான் இன்றைய காலகட்டத்தின் முக்கிய தேவை.
இவைகளை மனதில் கொண்டு தான் ஈழப் புரட்சி அமைப்பின் நிலைப்பாடுகளும், செயற்பா-டுகளும் அமைகின்றன.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை தடைசெய்து, நிராயுதபாணிகளாக்கி விட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் 13.12.86ல் விட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, சென்னையிலும் ஈழத்திலும் இந்நடவடிக்கையைக் கண்டித்து ஈழப் புரட்சி அமைப்பு அறிக்கைகள் விட்டிருந்தது. 'தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகளை அகிம்சை போராட்டம் மூலம் பெற முடியாத-தாலேயே, ஆயுதப்போராட்டத்திற்குத் தள்ளப்பட்டார்கள். நாங்கள் ஏந்தியிருக்கும் துப்பா-க்கிகள் எமது எதிரிகளையே குறிபார்க்கட்டும்! எமது எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? என்பதில் எமக்குத் தெளிவு வேண்டும். எமது போராட்டம் சிங்களச் சோவனிச எரசிற்கும், அமரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் எதிரானது.' என்றும்;

'விடுதலை இயக்கங்கள் தங்களுக்கிடையே மோதுவது தவிர்க்கப்பட வேண்டியதொன்று'. என்றும்; இயக்கங்களுக்கிடையேயான ஆயுதமோதலை ஈரோஸ் வன்மையாகக் கண்டிப்பதுடன், LTTE—EPRLF இறகிடையே நடைபெற்றுக்கொண்டிருக்கும் மோதலை உடனே நிறுத்தி அவர்களுக்கிடை-யேயுள்ள பிணக்குகளை பேசித்தீர்த்துக்கொள்ளவேண்டுமென ஈரோஸ் கேட்டுக்கொள்கிறது. என்றும், 15.12.1986ல் வெளிவந்த ஈரோஸ் அறிக்கை கூறுகின்றது.

ஈரோஸின் 14.12.1986 என்று திகதியிட்ட ஈழ அறிக்கையின் விபரம் பின்வருமாறு

LTTE-EPRLF பிரச்சனையில் ஈரோஸ் நடுநிலைமைவகிக்கும். இயக்கப்பிரச்சனைகளை ஆயுதத்-தால் தீர்த்துக்கொள்ளும் நிலைமை கட்டுமீறி வளருமேயானால், ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அரசாங்கத்தைப் பலப்படுத்துவதாகவே முடியும். இயக்கங்களுக்கிடையேயான பிரச்சனைகளை பேச்சுவார்த்தைகளின் மூலமே தீர்த்துக்கொள்ளவேண்டும். இன்றுள்ள நிலைமையை சீரமைக்கக்-கூடிய எல்லாவித நடவடிக்கைகளையும்ஈழப்புரட்சி அமைப்பு எடுக்கும்.

P.T.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கங்களை தடைசெய்து கட்டுப்படுத்த முயல்வதன்மூலம் ஈழப்போராட்டத்தை LTTE

பின்னடையச்செய்கின்றது. ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்கெதிரான நடவடிக்கைக்கு எல்.ரி.ரீ.ஈ தரும் விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. இந்நடவடிக்கையை இவர்கள் மறுபரிசீலனை செய்வார்களென நம்புகின்றோம். ஆயுதத்தால் இயக்கப்பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள முயல்வதை வன்மையாகக்கண்டிக்கின்றோம். இதற்கெதிராக மக்கள் கெம்பியெழுவதன் மூலம்தான் இப்படியான நடவடிக்கைகளைத்தடுத்து ஈழப்போராட்டத்தை முன்னெடுக்கமுடியும் என ஈழ அறிக்கை கூறுகின்றது.

இவை சரியான,முறையான,தெளிவான நிலைப்பாடு என நம்புகின்றோம்.

இருந்தாலும்,ஒருசிலர் இந்நிலைப்பாட்டை தவறாகப்புரிந்துகொண்டு ஈழப்புரட்சி அமைப்பிற்கெதிரான பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளனர். இத்தவறை இவர்கள் காலப்போக்கில் உணர்ந்தேயாவார்கள்.

எம் நிலைப்பாட்டின் சரிபிழைகளைச் சுட்டிக்காட்டி,ஈழப்போராட்டம் சீற்படித்துப்போகாமல் தடுத்து,சரியானபாதையில் முன்னெடுக்கக்கூடிய மாற்றுவழிகள் எதையுமே முன்வைக்காமல்,இன்று உருவாகியிருக்கும் நெருக்கடியை ஆக்கபூர்வமானமுறையில் சீரமைக்க வக்கும் வல்லமையும் அற்ற சில இயக்கங்கள்,இயக்க எதிர்ப்புவாதச்சுழற்சிக்குள் வீழ்ந்து பிரச்சாரவிபச்சாரம் செய்வது கவலைக்குரிய விடயம்.

சிறீ லங்கா அரசின் பொய்ப்பிரச்சாரங்களை தெய்வவாக்காகக்கொண்டு சொற்பிழையின்றி வெளிநாடுகளில் ஒப்புவித்து ஈழப்புரட்சி அமைப்பிற்கெதிராகப் பிரச்சாரம் செய்வதன் மூலம் உடனடிவெற்றியை இவர்கள் கண்டாலும்,முடிவான நீண்டகாலத்தீர்வை இவர்களால் வைக்கமுடியாது. இவர்களின் நடைமுறைவெற்றுத்தன்மையை பிரச்சாரக்குண்டுக்குள் புதைப்பதன் மூலம் ஈழப்போராட்டத்தை முன்னெடுக்கமுடியாது.இதற்கு,உணர்ச்சிகளுக்குப் பலியாகாமல் உணர்வுபூர்வமாகச் சிந்தித்து செயல்படும் மனப்பக்குவமும்,திறனும் வேண்டும். இக்கட்டான இச்சூழ்நிலையில்,எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல் நெருக்கடியை கட்டுமீறச்செய்து, ஈழப்போராட்டத்தை பின்னடையச்செய்யும் பாதையில்இட்டுச் செல்லக்கூடாது.

உண்மையில்,இன்றைய இந்நிலைமை தொடராமலிருக்கவேண்டுமானால், மீண்டுமொருமுறை தோன்றாமல் தடுக்கவேண்டுமானால், ஆக்கபூர்வமான முன்னணியொன்றை கட்டியெழுப்பியே ஆகவேண்டும் 'பெரிய இயக்க'வாதத்தை விட்டு,'நாங்கள் தான்' இந்த முன்னணிக்குத் தலைமை தாங்க வேண்டும் என்ற மாயையை விட்டு,குறைந்தபட்ச திட்டத்தினடிப்படையில் ஈழத்தேசிய விடுதலை முன்னணியை கட்டியெழுப்ப வேண்டும்.

இதற்கு இயக்க எதிர்ப்புவாதம் உதவியளிக்காது.

இயக்க எதிர்ப்புவாதம் எந்த வடிவத்திலிருந்தாலும்,இவை மக்களை அணிதிரட்டும் சக்தியாகவ முன்னணியைக் கட்டியெழுப்பும் பாலமாகவும்,இன்றயகாலகட்டத்தில் உருவெடுக்கமுடியாது. இது,தத்துவரீதியாக சிதைந்துபோன ஒரு சில இயக்கங்களையும்,தனிநபர்களையும் கும்பலாக்குமே தவிர மக்கள் சக்தியைக் கட்டியெழுப்பும் மாசக்தியாக மாற்றமெடுக்காது.

இது எங்கள் நிலைப்பாடு.

இந்நிலைப்பாட்டின் வெளிப்பாடாக அமைந்த அறிக்கைகள்,இன்று மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள நம்பக்கையையும்,உறுதியையும்,மனமாற்றத்தையும்,ஈழமக்களின் முன்னணிகள் தெரிந்தும் மறைக்கலாம், ஆனால் ஈழமக்கள்-ஈழவர் மறக்கமாட்டார்கள்.

இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையை ஈழப்போராளிகளுக்கு எந்தவித பாதகமும்

ஏற்படாத முறையில் தீர்க்கவேண்டும்.

சிறீ லங்கா அரசின் போர் முயற்சியை முறியடிக்க வேண்டும். ஈழப்போராட்டத்தை

முன்னெடுக்க வேண்டும்.

இதுதான் எங்கள் வரலாற்றுக் கடமை.

ஈழப்புரட்சி வெல்க.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்